## ஜயா கென்ரெய்னர் ரேர்மினல்ஸ் லிமிட்டட் - 2017

---

ஜயா கென்ரெய்னர் ரேர்மினல்ஸ் லிமிட்டட்டின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

ஜயா கென்ரெய்னர் ரேர்மினல்ஸ் லிமிட்டட்டின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்கள் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருவனவற்றை குறிப்பிடுகின்றேன்.

(அ) முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ)

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் பேணப்படுகின்றன.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கையின் 2.3.7 இன் பிரகாரம் சொத்துக்களின் கைதவிர்த்தல் பெறுமதி, பயன்தரு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத்தேய்வு முறை என்பன வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 42,731,605 தொகையான கம்பனியின் சொத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு துறைமுக அதிகாரசபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய முகாமைத்துவ சேவைக்கட்டணம் ரூபா 25,458,072 ஆக காணப்பட்டதுடன் துறைமுக அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 24,913,388 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அக்கணக்கு மீதிகளிற்கிடையே ரூபா 544,684 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கட்டிடத் திட்டத்தை தயாரிப்பதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,779,760 தொகை 2017 திசெம்பர் 31 வரை தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அத்தொகை துறைமுக அதிகாரசபையின் 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய மீதியொன்றாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனினும்,

இத்தொகை அறவிடப்படுதல் நிச்சயமற்றதொன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 3,502,963 வருமான வரித் தொகையில் ரூபா 2,092,290 தொகை 2017 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும், ரூபா 1,410,673 மிகுதித் தொகை 2018 மார்ச் 30 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.4 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

கம்பனியின் பணிப்பாளர் சபையின் ஒவ்வொரு உறுப்பினரிற்கும் ரூபா 200,000 வருடாந்தப் படிகள் உரித்துள்ளதெனவும் அதில் ரூபா 15,000 தொகை பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு பங்குபற்றுவதற்காக செலுத்தப்படும் எனவும் ஆண்டின் இறுதியில் ஒவ்வொரு உறுப்பினரிற்கும் கோரப்படாத மிகுதி தொகை செலுத்தப்படும் எனவும் 2016 சனவரி 12 இல் பணிப்பாளர் சபை தீர்மானமொன்றை எடுத்திருந்தது. இக்கொடுப்பனவு 2015 யூன் 17 ஆந் திகதிய பிஈடி/3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக இருந்ததுடன் ரூபா 200,000 படிக்காக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 2017 ஏப்ரல் 18 ஆந் திகதிய எம்பிஎஸ்/ஏடி/6/68/2017 ஆம் இலக்க கடிதமொன்று நிதி அமைச்சின் செயலாளரிற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் 2018 மார்ச் 31 வரை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

மேலும், சபையின் ஒவ்வொரு உறுப்பினர்களிற்கும் ரூபா 10,000 படி சபைக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்காக போக்குவரத்துப் படியாக ரூபா 520,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக சபையின் அங்கீகாரம் மாத்திரம் பெறப்பட்டிருந்த போதிலும், திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை** | |
| (i) 4.2.2 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியின் ஒவ்வொரு பிரிவுகளிலும் செயலாற்றல் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 5.1.1 ஆம் பிரிவு | கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 7.2 ஆம் பிரிவு | நிறுவனத்தின் கட்டுப்பாட்டுச் சூழலின் பிரதான கூறு ஒன்றாக கம்பனியின் அனைத்து பிரதான செயற்பாடுகளையும் மேவுகை செய்து நடைமுறைக் கைநூல் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியானது அத்தகைய நடைமுறைக் கைநூல் ஒன்றைத் தயாரித்திருக்கவில்லை. |
| (iv) 7.4.5 ஆம் பிரிவு | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா |

| | |
|---|---|
| | 42,731,605 பெறுமதியான நிலையான சொத்துக்களிற்காக பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (v) 9.3.1 ஆம் பிரிவு | அனைத்து நிறுவனங்களும் அனைத்துப் பதவிகளிற்குமான ஆட்சேர்ப்புத் திட்டமொன்றை தயாரித்து அதற்கு வரிசை அமைச்சின் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு என்பன பெறப்பட வேண்டிய போதிலும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் கம்பனி ஏற்கனவேயுள்ள பதவிகளிற்காக ஆட்சேர்ப்பு திட்டமொன்றை தயாரித்து அதற்கு உரிய தரப்பினர்களின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. கம்பனி அதனது கடமைகளை மேவுகை செய்வதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 94 பதவியணியினரை வேலையில் ஈடுபடுத்தியிருந்தது. |
| (ஆ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் கடிதங்கள்<br>– 2017 மார்ச் 21 ஆம் திகதிய பிஈ/பிஎஸ்/ஜேசீரீஎல்/2017 ஆம் இலக்க கடிதம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 330,038,900 திரண்ட இலாபத்திலிருந்து ரூபா 33,003,890 இற்குச் சமமான 10 சதவீத மற்றும் 2016 ஆம் ஆண்டின் ரூபா 77,651,525 தேறிய இலாபத்திலிருந்து ரூபா 23,295,457 இற்குச் சமமான 30 சதவீத பங்கிலாபங்களை 2017 யூலை 31 இல் உள்ளவாறு இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை தாய்க் கம்பனி ஊடாக திரண்ட நிதியத்திற்குச் செலுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய தொகை இவ் அறிக்கைத் திகதி வரையிலும் திறைசேரிக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் இக் கணக்கு 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய பங்கிலாபங்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. ஆகையால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டியவைகள் ரூபா 56,299,347 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. |
| – 2018 ஏப்ரல் 24 ஆம் திகதிய பிஈ/பிஎஸ்/ஜேசீரீஎல்/ஜீஈஎன்/2018 ஆம் இலக்க கடிதம் | கம்பனியால் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு பங்கிலாபங்களை செலுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை அதனது வருமானத்தின் பகுதியொன்றாக பொதுத் திறைசேரிக்கு அவ் வருமானத்தை செலுத்த வேண்டும். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 104.7 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 77.6 மில்லியன் ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 27.1 மில்லியன் அதாவது 35 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மொத்த இலாபம் ரூபா 26 மில்லியனால் அதிகரித்தமை மேற்படி முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக இருந்தது. எண்ணெய் செயற்பாட்டு நடவடிக்கைகள் அதிகரித்தமை மற்றும் டொலரிற்கு எதிராக ரூபாவின் பெறுமதி (நாணயமாற்றத்தின் பெறுமதி குறைவடைதல்) அதிகரித்தமை என்பன மேற்படி இலாபம் அதிகரித்தமைக்கான பிரதான காரணங்களாக காணப்பட்டன.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டின் ரூபா 45 மில்லியன் தொகையான இலாபம் தொடர்ந்துவரும் ஆண்டுகளில் தளம்பலடைந்து 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 104 மில்லியனாக காணப்பட்டது. ஊழியர் சம்பளம், அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கம் செய்த போது 2013 ஆம் ஆண்டின் ரூபா 159 மில்லியன் தொகையான கம்பனியின் பங்களிப்பு தளம்பலடைந்திருந்ததுடன் இது 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 237 மில்லியனாக காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 வகையான பிரதான எண்ணெய்க்கான களஞ்சிய வசதிகள், சூடுபடுத்தல் மற்றும் சரக்குக் கப்பல் வசதிகளை கம்பனி வழங்குகின்றது. எம்எவ்ஓ 380 எண்ணெய்க்கான எண்ணெய் சரக்குக் கப்பல் கட்டணங்கள், களஞ்சியப்படுத்தல் கட்டணங்கள் மற்றும் சூடுபடுத்தல் கட்டணங்கள் போன்ற அதன் சேவைகள் மீது 03 வகையான சேவைக் கட்டணங்களை கம்பனி அறவிடுகின்றது. இதனால் ஆண்டின் போது கட்டணங்களாக முறையே ரூபா 255 மில்லியன், ரூபா 183 மில்லியன் மற்றும் ரூபா 100 மில்லியன் ஆக ரூபா 538 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானமும் மேலதிக நேரக் கட்டண வருமானம் மற்றும் ஏனைய கட்டணங்களாக ரூபா 10 மில்லியனுமாக ரூபா 548 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 55 சதவீதம் அதாவது ரூபா 301 மில்லியன் துறைமுகங்கள் அதிகாரசபையின் பங்காக காணப்பட்டதுடன் 45 சதவீதம் அதாவது ரூபா 247 மில்லியன் கம்பனியின் வருமானமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் ரூபா 203 மில்லியன் வருமானத்துடன் ஒப்பிடும் போது நடப்பாண்டின் போது கம்பனிக்கு கிடைத்த வருமானம் ரூபா 43 மில்லியன் அதாவது 21.13 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் எண்ணெய் செயற்பாட்டு நடவடிக்கைகள் 20.68 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் பரிமாற்ற வீதம் அதிகரித்தமை என்பன இவ் முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**4.1.1 செயலாற்றல் மற்றும் மீளாய்வு**

கம்பனியின் பிரதான தொழிற்பாடானது மூன்று வகையான கப்பல் எண்ணெயை (bunkering oil) ஏற்றுதல் மற்றும் இறக்குதல் ஆக உள்ளதுடன் அவை தொடர்பான மீளாய்வாண்டு மற்றும் முன்னைய மூன்று ஆண்டுகளின் தகவல்கள் பின்வருமாறு உள்ளன.

**மெற்றிக் தொன் அலகுகள்**

| **எண்ணெய் வகை** | **2017** | | **2016** | | **2015** | | **2014** | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **ஏற்றுதல்** | **இறக்குதல்** | **ஏற்றுதல்** | **இறக்குதல்** | **ஏற்றுதல்** | **இறக்குதல்** | **ஏற்றுதல்** | **இறக்குதல்** |
| எம்எவ்ஓ 180 | 25,591 | 23,627 | 26,610 | 26,513 | 38,172 | 36,377 | 46,083 | 48,131 |
| எம்எவ்ஓ 380 | 481,239 | 506,773 | 378,300 | 386,345 | 347,143 | 338,750 | 226,153 | 243,460 |
| எம்ஜீஓ | 52,007 | 45,802 | 56,522 | 57,523 | 50,714 | 50,274 | 61,402 | 61,997 |
| **மொத்தம்** | **558,837** | **576,202** | **461,432** | **470,381** | **436,029** | **425,401** | **333,638** | **353,588** |
| அதிகரிப்பு அலகுகள் | 95,441 | 82,194 | 25,403 | 44,980 | 102,391 | 71,813 | - | - |
| வருடாந்த அதிகரிப்பின் சதவீதம் | 21 | 17 | 6 | 11 | 31 | 20 | - | - |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது எம்எவ்ஓ 380 எண்ணெய் ஏற்றுதல் (Lording) 27 சதவீதத்தினால் அதிகரித்திருந்த அதேநேரம் கப்பல் எரிவாயு எண்ணெய் (Marine Gas Oil) (MGO) மற்றும் எம்எவ்ஓ 180 எண்ணெய் என்பன முறையே 8 சதவீதத்தாலும் 4 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தன. மொத்த எண்ணெய் ஏற்றுதலில் 87 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த எம்எவ்ஓ 380 எண்ணெய் ஏற்றுதல் அதிகரித்ததன் காரணமாக முழுமையான ஏற்றுதல் 20 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் எம்எவ்ஓ 380 எண்ணெய் இறக்குதல் (discharging) 31 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேநேரம் கப்பல் எரிவாயு எண்ணெய் (MGO) மற்றும் எம்எவ்ஓ 180 எண்ணெய் இறக்குதல் என்பன முறையே 20 சதவீதத்தாலும் 11 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தன. மொத்த எண்ணெய் இறக்குதலில் 86 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த எம்எவ்ஓ 380 எண்ணெய் இறக்குதல் அதிகரித்ததன் காரணமாக முழுமையான இறக்குதல் 18 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(இ) 35,988 மெற்றிக் தொன் மொத்த இயலளவை கொண்டுள்ள கம்பனிக்குச் சொந்தமான 13 தாங்கிகளில் 58.51 சதவீத இயலளவை கொண்டுள்ள 06 எண்ணெய் தாங்கிகளில் எம்எவ்ஓ 380 எண்ணெய் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன் 26.4 சதவீத இயலளவை கொண்டுள்ள 06 எண்ணெய் தாங்கிகளில் எம்ஜீஓ எண்ணெய் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன் 15 சதவீத இயலளவை கொண்டுள்ள ஏனைய தாங்கியில் எம்எவ்ஓ 180 எண்ணெய் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

(ஈ) எண்ணெய் களஞ்சிய கட்டணங்களை கருத்தில்கொள்ளும் போது மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் போது 03 வகையான எண்ணெய்க்கான மொத்த தாங்கிகளின் பயன்பாடு ஒவ்வொரு ஆண்டிலும் பின்வருமாறுள்ளன.

| ஆண்டு | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|---|---|
| பயன்பாட்டு விகிதம் (சதவீதம்) | 61.03 | 57.77 | 47.59 | 51.53 | 34.22 |

மேற்படி தரவுகளின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட 34 சதவீத இயலளவு 2017 ஆம் ஆண்டில் 61 சதவீதம் வரை படிப்படியாக அதிகரித்திருந்தது.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனிக்குச் சொந்தமான 13 தாங்கிகளில் 11 முகவர்களால் 03 வகையான எண்ணெய் களஞ்சியப்படுத்தப்படுகின்றதுடன் அத் தாங்கிகள் பொதுவாக முகவர்களால் பயன்படுத்தப்படுகின்றன. தாங்கிகளிற்கு செலுத்தப்படுகின்ற எண்ணெய்யின் அளவு மற்றும் தாங்கிகளிலிருந்து அகற்றப்படுகின்ற எண்ணெய்யின் அளவு என்பன சரியாக அளவிடப்பட்டிருக்கவில்லை. இதனால் 2,576 மெற்றிக்தொன் எண்ணெய் இருப்பு 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் புத்தக மீதிகள் மற்றும் பௌதீக மீதிகளிற்கிடையில் வேறுபாடுகள் காணப்பட்டதன் காரணமாக 04 தடவைகள் இலங்கை சுங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டிருந்தன. சுங்கத்தால் விற்பனை செய்யப்பட்ட அவ் எண்ணெய் மேற்படி முகவர்களால் கொள்வனவு செய்யப்பட்டு கப்பல்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. சுங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்ட பின்னர் அவ் எண்ணெயை விற்பனை செய்யும் வரை எவ்வித களஞ்சியக் கட்டணங்களும் அறவிடப்பட்டிருக்கவில்லை. எனினும் மிகவும் வினைத்திறனான இருப்புக் கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் கம்பனி களஞ்சியப்படுத்தல் கட்டணங்களிலிருந்து அதிக வருமானத்தை உழைக்க முடியும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) கம்பனிப் பங்கு உரிமைமாற்றச் சான்றிதழ்களை வழங்கும் போது உத்தியோகத்தர்களின் பதவிகளிற்குப் பதிலாக கம்பனி தனிப்பட்ட பெயர்களை பயன்படுத்தியிருந்ததன் காரணமாக உரிய பதவிகளை கொண்டிருக்கும் உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறும் போது அல்லது பதவிவிலகும் போது முறையான பங்கு உரிமைமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காதமை சில சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டன. ஆகையால், பங்கு உரிமைமாற்றத்தின் போது செல்லுபடியாகும் காலம் மற்றும் நாளதுவரையாக்கும் நடவடிக்கைகளின் சட்டரீதியான சிக்கல் தன்மையிலுள்ள ஆபத்தை தவிர்க்க முடியாதிருந்தது.

(இ) களஞ்சியங்களிற்கு மூலப்பொருட்களை பெற்றுக்கொள்ளும் போது பொருள் பெறுகை குறிப்பு வழங்கப்பட வேண்டியதுடன் மூலப்பொருட்களின் விபரங்கள் பின் அட்டைகளில் (BIN Cards) பதிவுசெய்யப்பட வேண்டும். எனினும், கம்பனி 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1,632,445 பெறுமதிக்கான மூலப்பொருட்களை கொள்வனவு செய்திருந்த போதிலும் பெறப்பட்ட மூலப்பொருட்களை பதிவு செய்வதற்கு பொருள் பெறுகைக் குறிப்புக்கள் மற்றும் பின் அட்டைகளை பயன்படுத்தியிருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டின் இறுதியில் இருப்பு மீதி தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் உரிய பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பதவியணியினர் நிர்வாகம்

கம்பனியிலுள்ள பதவியணியினரிற்கு வேலைகளின் முறையான அதிகாரக் கையளிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 94 உத்தியோகத்தர்களில் 61 உத்தியோகத்தர்களிற்கு கடமைப் பட்டியல்களை கம்பனி வழங்கியிருக்கவில்லை.

## 4.4 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரொருவர் 2017 திசெம்பர் 15 இல் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததென தலைவர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கான அங்கீகாரம் பெறப்படாமை. |
| (ஆ) | வாகனப் பயன்பாடு | ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியாக சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் பயன்படுத்தப்படாமை. |